# மாலைக்கதிர்
Maalaikkathir



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel





சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை 27.05.2025 கதிர் 207




கடும் எதிர்ப்புக்களையடுத்து

## வடக்கு காணி அபகரிப்பு தொடர்பான வர்த்தமானியை மீளப்பெற்றது அரசு!

கொழும்பு, மே 27

வடக்கு மாகாண காணி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசு மீளப்பெற்றுள்ளது.

அரசால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 ஆம் திகதியிடப்பட்டு 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின் அவை அரச காணிகளாகப்

7

# வர்த்தமானியை மீளப்பெற்றமைக்காக அநுரவுக்கு நன்றி தெரிவித்த சுமந்திரன்

### இன்றிரவே வர்த்தமானியில் வாபஸ் குறித்த அறிவித்தலை பிரசுரிக்க வேண்டும் எனவும் அவர் பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு, மே 27

வடக்கு மாகாண காணி தொடர்பான வர்த்தமானியை மீளபெற்றமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அமைச்சரவைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நன்றி தெரிவித்துள்ளார்

7



## வீதி விபத்துக்களால் இவ்வருடம் இதுவரை 1062 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 27

இலங்கையில் 2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மே மாதம் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் வீதி விபத்துக்களால் 1062 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.



## சஜித் டிசம்பரில் ஜனாதிபதி என்பது கனவு மாத்திரமே!

### அநுர அரசு விளாசல்

கொழும்பு, மே 27

“ஒரு கட்சியின் வளர்ச்சியில் தொகுதி அமைப்பாளர்கள் பிரதான பங்கு வகிக்கின்றார்கள். அவர்களே மக்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கின்றார்கள். இன்று அவர்களே பதவி விலகும் நிலையில் எதிர்வரும் டிசம்பரில் குறுக்கு வழியில் ஜனாதிபதியாகப் பதவியேற்கக் கனவு காண்கின்றார்

7



## மூதூர், குச்சவெளி பிரதேச சபைகளில் ஆட்சி அமைக்க தமிழரசு – மு.கா. இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை!



திருகோணமலை, மே 27

குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இன்று திருகோணமலை மாநகரில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முகம்மது சரீப் தௌபீக் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன் ஆகியோர் கையொப்பம் இட்டனர் .

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இரண்டு கட்சியினரும் பின்வருமாறு உடன்பட்டுக் கொள்கின்றனர்.

1. குச்சவெளிப் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நோர்வூட் பிரதேச செயலகம் ஹட்டனுக்கு இடமாற்றப்படாது!

## ஜீவனிடம் பிரதேச செயலர் உறுதி



நுவரெலியா, மே 27

நோர்வூட் பிரதேச செயலகம் ஹட்டன் நகருக்கு இடமாற்றம் செய்யப்படாமல், தற்போது இருக்கும் கட்டடத்திலேயே தொடர்ந்து இயங்கும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானிடம், நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி. கம்லத் உறுதியளித்துள்ளார்.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச செயலக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் (டிக்கோயா) இன்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்,

“சிறுநீரக நோய் தாக்கத்துக்கான வைத்திய சேவைகளை வழங்குவதற்காக வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறைகள் நிலவுவதால் அதனை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.” - என்று வலியுறுத்தினார்.

“பாடசாலை மாணவர்கள் மத்தியிலான போதைப்பொருள் பாவனையும் சமூகப் பிரச்சினையாகும். மலையகத்திலும் இந்தப் பிரச்சினை உள்ளது. இதனைத்தடுப்பதற்குப்பொலிஸார் ஊடாக நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு கண்காணிப்புக் குழு அமைத்தோம். அதில் கட்டாயமாக ஒரு பெண் பொலிஸ் அதிகாரியும் இருப்பார். அந்தச் செயற்றிட்டத்தை மீண்டும் ஆரம்பித்தால் இந்தப் பிரச்சினையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். மேலும் எங்களது கோரிக்கையை ஏற்று நோர்வூட் பிரதேச செயலக இடமாற்றத்தை நிறுத்தியமைக்காக இந்த நேரத்தில் அரசுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.” - என்றும் ஜீவன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச செயலக செயலாளர் ஜி.எஸ்.டி கம்லத் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், கலைச்செல்வி, ஹட்டன் - டிக்கோயா நகர சபை செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர், நோர்வூட் பிரதேச சபை செயலாளர், அரச நிறுவன அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், கிராம சேவகர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தார்கள்.

# கொழும்பில் கடையில் தீ



கொழும்பு, மே 27

கொழும்பு, இராஜகிரியப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்து இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

கோட்டை மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் இணைந்து தீயைகே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்த 4 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரு மில்லியனை தாண்டிய சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, மே .27

2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை தாண்டியுள்ளது. இத்தகவலை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, மே மாதம் 25 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,006,097 ஆக பதிவாகியுள்ளது. மேலும், மே மாதத்தில் மே 25 வரை மேலும் 109,213 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)



# சிகிச்சை வழங்காததால் இளைஞன் மரணம்

கொழும்பு, மே .27

காலி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை வழங்காத நிலையில் அவர் உயிரிழந்ததாக உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நிலையில் உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பான அறிக்கையை, காலி மரண விசாரணை அதிகாரி சந்திரசேன லொக்குகே நேற்று நீதவானுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார்.

உயிரிழந்தவர் காலி, ஜின்தொட்ட பகுதியை சேர்ந்த 31 வயதான சதுரங்க சந்தருவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஜின்தொட்ட பகுதியில் சுற்றுலா விடுதி நடத்தி வந்த குறித்த இளைஞன், நேற்று முன்தினம் மதியம் மாத்தறையில் இருந்து காலி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது ஹபராதுவ பகுதியில் விபத்துக்குள்ளானார்.

காயமடைந்த நபர் காலி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவின் 58வது அறையில் அனுமதிக்கப்பட்டார்.

தனது சகோதரர் விபத்தில் சிக்கியதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் தனது தாயாருடன் மருத்துவமனைக்கு வந்தபோது, தனது சகோதரர் ஒரு டிராலியில் கிடப்பதைக் கண்டதாக உயிரிழந்த இளைஞனின் சகோதரி தெரிவித்துள்ளார்.

“நாங்கள் வந்த போது, என் சகோதரனுக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் தெரியவில்லை. அவர் நன்றாக இருந்தார். ஆனால் அவரது அடிவயிற்றின் கீழ் பகுதி மிகவும் வலிப்பதாக அவர் கூறினார். நாங்கள் இது குறித்து வைத்தியர் மற்றும் தாதிகளிடம் கூறினோம். ஆனால் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

என் சகோதரனுக்கு எந்த வலியும் இல்லை என்று அவர்கள் கூறினர். அவர்கள் எக்ஸ்ரே எடுப்பதாக கூறினார்கள். ஆனால் எடுக்கவில்லை. என் சகோதரனால் வலியைத் தாங்க முடியவில்லை, பல சந்தர்ப்பங்களில் அவருக்கு வலி இருப்பதாக மருத்துவமனை ஊழியர்களிடம் கூறினார். ஆனால் யாரும் அவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை.

என் சகோதரர் நேற்று காலை வரை டிராலியில் இருந்தார். அவர் வலியைத் தாங்க முடியாமல் டிராலியில் இருந்து இறங்கி மருத்துவமனைக்கு வந்த அம்புலன்ஸில் சென்று, எனக்கு எந்த மருந்தும் கொடுக்க மாட்டார்கள் எனவும் என்னை ஒரு தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் கூறினார். அந்த நேரத்தில், மருத்துவமனை ஊழியர்கள் அவரை அம்புலன்ஸில் இருந்து திரும்ப அழைத்துச் சென்று ஒரு நாற்காலியில் உட்கார வைத்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, என் சகோதரர் இரத்த



வாந்தி எடுத்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மருத்துவமனையில் அவருக்கு சரியான சிகிச்சை கிடைக்காததால் இந்த மரணம் நிகழ்ந்தது.” என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கொழும்பு மாநகரசபையை கைப்பற்ற உதவும் வர்த்தகர்கள்



கொழும்பு, மே .27

கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்தை அமைப்பதற்காக, ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு உதவ, வர்த்தகர்கள் குழு ஒன்று முன்வந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் சில வர்த்தகர்கள், இதற்காக உறுப்பினர்களுக்கு நிதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக்குற்றச்சாட்டை தாம் பொறுப்புடன் முன்வைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2025 உள்ளூராட்சி தேர்தலில், கொழும்பு மாநகரசபையில் ஐந்து சுயாதீன குழுக்கள் ஆசனங்களை வென்றன. சுயேட்சை குழு 1 ஒரு இடத்தையும், குழு 2 ஒரு இடத்தையும், குழு 3 மூன்று இடங்களையும், குழு 4 இரண்டு இடங்களையும், குழு 5 இரண்டு இடங்களையும் பெற்றன.

இதில், இரண்டு இடங்களைப் பெற்ற சுயேட்சை குழு 5, தமது ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் உறுதியை வழங்கியுள்ளதாக. ரஹ்மான் கூறியுள்ளார். (ஐ)

## சில பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை!


*கொழும்பு, மே .27*

*நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சில பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, களுத்துறை மாவட்டத்தில் பாலிந்தநுவர, கங்கை இஹல கோரள, கண்டி மாவட்டத்தில் பஸ்பகே கோரள, கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க, புலத்கோ/ஹபிட்டிய, யட்டியந்தோட்டை மற்றும் ருவன்வெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த எச்சரிக்கையானது இன்று காலை 10 மணி முதல் நாளை காலை 10 மணி வரை அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.*

## அரச வேலைக்கு 15,073 ஆட்சேர்ப்புக்கு அனுமதி



கொழும்பு, மே .27

இலங்கை அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு (2) அறிக்கைகள் ஊடாக 18 நிரல் அமைச்சுக்கள், 04 மாகாண சபைகள் மற்றும் 02 விசேட செலவு அலகுகளில் நிலவும் 15,073 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விதந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அறிக்கை மூலம் விதந்துரை செய்யப்பட்ட ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை!



*கொழும்பு, மே .27*

*நாட்டில் தற்போது நிலவும் மழை நிலைமைகள் அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.*

*இதனால், இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக கடுமையான காற்று மற்றும் மின்னல் ஆகியவற்றால் ஏற்படும் ஆபத்துகளை குறைக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை எச்சரித்துள்ளது.*

*இதேவேளை, தென்மேற்கு பருவமழையின் தாக்கம் காரணமாக, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அடுத்த சில நாட்களில் மழை நிலைமை அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்று(27) அவ்வப்போது சிறியளவான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள சில இடங்களில் 100 மி.மீ.க்கு மேல் கனமழை பெய்யக்கூடும்.*

*மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவு பகுதிகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 40–50 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.*

*இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் காரணமாக ஏற்படும் அபாயங்களை குறைப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.*

*(ஐ)*

# தேசிய கல்வி கொள்கையில் அரசியல் செய்யும் 3 மாநிலங்கள் தர்மேந்திர பிரதான் குற்றச்சாட்டு


தேசிய கல்வி கொள்கை விவகாரத்தில் 3 மாநில அரசுகள் அரசியல் செய்வதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது பிரதமர் மோடியின் 3வது ஆட்சி காலத்தின் முதல் ஆண்டில், கல்வித்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. உள்கட்டமைப்பு, நவீனமயமாக்கல் என பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்திய இளைஞர்களுக்கு கல்வி எப்போதும் ஒரு முக்கிய தூணாகவும், முக்கிய ஈர்ப்பாகவும் இருந்து வருகிறது. தேசிய கல்விக் கொள்கை இந்தியாவில் கற்றலின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு தொலைநோக்கு திட்டமாகும். இந்த விவகாரத்தில் 3 மாநிலங்கள் அரசியல் செய்கின்றன.

5 முதல் 23 வயதுக்குட்பட்ட 30 கோடி மாணவர்களைக் கொண்ட இந்தியாவில், கல்வி சீர்திருத்தங்கள் என்பது மிகவும்முக்கியத்துவம் வாய்ந்தது. தேசிய கல்விக் கொள்கையானது, தொழில்நுட்பத்தின் மூலம் பாரம்பரியத்தையும், எதிர்கால இலக்குகளையும் இணைக்கிறது. மாணவர்களுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும் தேசிய கல்விக் கொள்கை, அவர்களின் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளவும் உதவுகிறது, இவ்வாறு அவர் கூறினார். (ஐ)





## பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிப்போம்: பிரதமர் மோடி உறுதி

"இந்தியாவில் இருந்து பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது," என பிரதமர் மோடி தெரிவித்தார்.

குஜராத் மாநிலம், காந்தி நகரில் ரூ.5,536 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து, பிரதமர் மோடி பேசியதாவது: உலகின் 4வது பொருளாதார நாடானது இந்தியா. இப்போது நாம் ஜப்பானை விஞ்சிவிட்டோம் என்பது நம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் விஷயம். ஆறாவது இடத்திலிருந்து ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியபோது, நாடு முழுவதும், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட உற்சாகம் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

1947ம் ஆண்டிலேயே பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். சர்தார் படேலின் அறிவுரை புறக்கணிக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து பயங்கரவாதத்தை அகற்ற தனது அரசு முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானுடன் போர்கள் நடந்தபோது, பாகிஸ்தானை மூன்று முறை தோற்கடித்தோம். நேரடியாக போரிட்டு இந்தியாவை வீழ்த்த முடியாததால் பயங்கரவாத அமைப்புகள் மூலம் பாகிஸ்தான் மக்களை தாக்குகிறது.

பாகிஸ்தானின் கொடிகள் பயங்கரவாதிகளின் சவப்பெட்டிகளில் வைக்கப்பட்டன. மேலும் அவர்களின் ராணுவத்தினர் இறுதி சடங்கில் பங்கேற்றனர். நாங்கள் யாருடனும் பகைமையைத் தேடவில்லை. நாங்கள் அமைதியாக வாழ விரும்புகிறோம். முப்படையினரை பாராட்டி நாடு முழுவதும் எழுச்சி உடன் நடை பெறும் மூவர்ணக் கொடி பேரணி, மக்களின் தேசப்பற்றை வெளிப்படுத்துகிறது. நாட்டில் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடிபேசினார். (ஐ)

## 5ஆம் தலைமுறை போர் விமானங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்க மத்திய அரசு ஒப்புதல்



5ஆம் தலைமுறை போர் விமானங்களை தனியார் பங்களிப்புடன் உருவாக்க மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்புத் திறனை மேம்படுத்தவும், வலுவான உள்நாட்டு விண்வெளி தொழில்துறையை வளர்க்கும் விதமாக பாதுகாப்புத்துறை இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையில் மேற்கொள்ளப்படும் 5ம் தலைமுறைக்கான போர் விமானங்களை உருவாக்கும் இந்த திட்டத்தில், தனியாரும் பங்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள், சுயாதீனமாகவோ அல்லது கூட்டு முயற்சியாகவோ இந்த திட்டத்திற்கான ஏலத்தில் பங்கேற்கலாம். அரசின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு இயங்கும் ஒரு இந்தியநிறுவனமாக இருக்கவேண்டும்என்பது கட்டாயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 5ம் தலைமுறை போர் விமானம், 2035ம் ஆண்டுக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் சமீர் வி காமத் கூறுகையில், 'இந்தத் திட்டத்திற்கு 2024ம் ஆண்டு நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 5ம் தலைமுறை விமானங்களை பயன்பாட்டுக் கொண்டு வர 10 ஆண்டுகளாகும். 4ம் தலைமுறை இன்ஜினான காவேரியில் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டோம். தற்போது எங்களின் இலக்கு 6ம் தலைமுறை இன்ஜின் தான்,' என்றார். (ஐ)

## அரைத்த மாவை அரைக்கும் இ.பி.எஸ்.,: முதல்வர் ஸ்டாலின் பதில்

தி.மு.க., ஆட்சியைக் குறை சொல்ல ஏதுமில்லாததால், எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்., அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னை கொளத்தூரில் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது இந்த ஆட்சியைப் பற்றி குறை சொல்ல அவருக்கு ஏதும் கிடைக்கவில்லை. அதனால், தான் திரும்ப திரும்ப அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு பதில் சொல்லி என்னுடைய தரத்தை நான் குறைத்து கொள்ள விரும்பவில்லை, எனக் கூறினார்.

கேள்வி வெள்ளைக் கொடியுடன் டில்லி சென்று வந்ததாக எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்., விமர்சனம்


பதில் நான் தான் ஏற்கனவே தெளிவா சொல்லிவிட்டேனே. வெள்ளைக்கொடியுடனும் போகவில்லை. காவி கொடியுடனும் போகவில்லை என்று கூறிவிட்டேன், என்றார்.

கேள்வி தி.மு.க., ஆட்சி முடியும் வரை மக்களை தாங்களே தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று இ.பி.எஸ்., விமர்சனம்

பதில் அது எல்லாம் கொள்ளையடித்த ஆட்சி. ஏற்கனவே, சாத்தான்குளம், தூத்துக்குடி போன்ற சம்பவங்கள் உள்ளன. அதை எல்லாம் சொல்லிட்டு இருந்தால், நேரம் பத்தாது. இது எல்லாம் வீம்புக்கு என்று பண்ணுவது. அதற்கு சில மீடியாக்கள் இரையாகி, அந்த செய்திகளை மீண்டும் மீண்டும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்றார். (ஐ)



# யாருடைய தவறு?








தனக்குப் பாலியல் சீண்டலோ பாலியல் வன்புணர்வோ நடந்துவிட்டது என பாதிக்கப்பட்டப் பெண், பொதுவெளியில் சொன்னால், பலரும் அந்த குற்றவாளியின் மீது கோபம் கொள்வார்கள். உச்சபட்ச தண்டனை கொடுக்க வேண்டும் எனச் சொல்வார்கள்.

அந்தக் குற்றவாளிகள் தங்கள் வீட்டு ஆண்களாகவோ, தங்களுக்கு நெருக்கமானவர்களாகவோ இருந்தால், ‘என் வீட்டு ஆண்மகனா இப்படி நடந்து கொண்டான்? அய்யகோ!’ என வருத்தப்படுவார்கள் சிலர். சிலரோ என் வீட்டு ஆணை, நான் அப்படி வளர்க்கவில்லை என வக்காலத்து வாங்கவும் செய்வார்கள்.



பாதிக்கப்பட்டப் பெண் பொதுவெளியில் தனக்கு நடந்த அநீதியைச்சொன்னவுடன், வன்புணர்வுக்கு ஆளானப் பெண் யார் என்ற கேள்வி எழும். அவள் பொதுவெளியில் தைரியமாகப் பேசுபவளாக இருந்தாலோ, அதிலும் நவநாகரிக (Modern Dress) உடை உடுத்துபவளாக இருந்தாலோ, அங்கேயே அந்த ஆண் குற்றவாளியின் மீதானக் கோபம், வெறும் கண்டிப்போடு நின்றுவிடும்.

கூடுதலாக, ‘அந்த பெண் இப்படி உடை அணிந்தால், பொதுவெளியில் இப்படி வாயாடினால், யாராக இருந்தாலும் மனம் அலைபாயும்’ என பொத்தாம் பொதுவான தங்கள் முத்தான வார்த்தைகளையும் சேர்த்து உதிர்ப்பார்கள்.

மேலும் கூடுதலாக, அந்தப் பெண் மது அருந்தியிருக்கும் வேளையில் பாலியல் சீண்டலுக்கோ வன்புணர்வுக்கோ ஆளானால், அவ்வளவு தான். ஏதோ அந்தப் பெண்ணே, தன்னை பாலியல் சீண்டலுக்கு ஒப்புக்கொடுத்தது போல பேசுவார்கள்.

‘ஒரு பெண் எந்த நிலையில் இருந்தாலும், அவளது அனுமதியின்றி அவளைத் தொடுவதோ, வன்புணர்வதோ தவறு, அது மனிதமற்ற செயல்’ என மட்டும் சொல்ல மாட்டார்கள். இதற்கு நாம் காரணம் கேட்டால், அந்தப் பெண் இப்படி பொதுவெளியில் வாயாடாமல் இருந்திருந்தால், நவநாகரிக உடை உடுத்தாமல் இருந்திருந்தால், அவள் மது அருந்தாமல் இருந்திருந்தால், அவள் அந்த இரவு வெளியில் செல்லாமல் இருந்திருந்தால், என, இப்படிப் பல ‘இருந்திருந்தால்’களை அடுக்கி, அப்பெண் பாலியல் வன்புணர்வு/சீண்டல் செய்யப்பட்டதற்கு காரணம் கற்பித்து, அவளுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதியை நீர்த்துப் போகச் செய்வார்கள். அல்லது அப்பெண்ணுக்கு அப்படி நடந்தது சரிதான் என நியாயம் கற்பிப்பார்கள்.

இத்தனையையும் தாண்டி, தனக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்க அப்பெண் புறப்பட்டால், குடும்ப கௌரவம், சமூக அந்தஸ்து ஆகியவைகள் உடைந்து விடும் எனச் சொல்லி, அப்பெண்ணை பொதுவெளியில் பேச அனுமதிக்க மாட்டார்கள். அதையும் மீறி அவள் சட்டத்தை நாடினால், அவளுக்கு நடந்த அநீதியை அவள் நிரூபித்து, அவளுக்கான நீதி கிடைப்பதற்கு முன் அவள் இந்த மண்ணை விட்டு மறைந்திருப்பாள்.

அப்படியே அவள் கண் முன்னே அந்தக் குற்றவாளிக்குத் தண்டனை கிடைத்தாலும், அவள் நிம்மதி பெருமூச்சு விட்டு கொஞ்சம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் முன், தண்டனைக் காலம் முடிந்து, அந்தக் குற்றவாளி நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அவள் முன்னாலேயே நடமாடுவான். இன்னும் ஒரு படி மேலே சென்று, அவனது பெயரை மாற்றி அவனுக்கு சுயதொழில் செய்து சம்பாதிக்க தையல் மிஷினும் கொடுத்து அனுப்பும், ‘So Called மனிதாபிமானம்’ காக்கும் நீதித்துறை.

ஒரு பெண்ணுக்கு அரசியல் காரணங்களாலோ, மதக் கலவரத்தை காரணம் காட்டியோ பாலியல் வன்புணர்வு நடந்திருந்தால், அதுவும் அப்பெண் விளிம்புநிலை/சிறுபான்மை மக்களின் ஒருவராக இருந்து, குற்றவாளிகள் சமூகத்தின் அதிகார(சாதி, மதம், அரசியல்) பலத்தோடு இருந்தால், அந்தக் குற்றவாளி, குறிப்பிட்ட சாதியப் பின்புலத்தில் உள்ளவர் எனச் சொல்லி, நன்னடத்தைக் காரணமாக தண்டனைக் காலத்திற்கு முன்பே நீதிமன்றம் விடுவிக்கும். அந்தக் குற்றவாளிகளை ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து வரவேற்கும் ஒரு கும்பல்.

இதைப் படிக்கும் போது சலிப்பு ஏற்படலாம். ‘பெண்ணாய் பிறந்ததே பாவம்’ எனக்கூட பல பெண்கள் வருத்தப் படலாம். தனக்கு எதிராக அத்தனையையும் இந்த சமூகத்தில் கட்டமைத்து வைத்துள்ள ஆண்கள் மீது பெண்கள் கோபப்படலாம்.

தன் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு, அப்பெண் வருத்தப்படும் போதும், அங்க லாய்க்கும் போதும், தட்டிக்கொடுத்து ஆறுதல் சொல்பவர்கள், அவள் கோபம் கொள்ளும் போது, ‘நீ எப்படி கோபம் கொள்ளலாம்?’, ‘எல்லா ஆண்களையும் நீ எப்படி குற்றம் சொல்லலாம்?’, ‘நான் என்ன அப்படியா?’, ‘அவன் தான் அப்படி செய்தான். நீ அவனை மட்டும் திட்டாமல், ஆண்கள் எனப் பொதுமைப் படுத்து வது ஏன்?’ என, அவளது கோபத்தைக் கூட, சல்லடை கொண்டு சலித்து, வெளிப்படுத்தச் சொல்லி அவளை கட்டாயப் படுத்தும். கேட்டால், ஒரு ஆணின் தவறுக்கு மற்ற ஆண்கள் எப்படி பொறுப்பாக முடியும் எனக் கேட்பார்கள்.

நம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பெண்களும், ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏதோ ஒரு பாலியல் சீண்டலைக் கடந்துதான் வந்திருப்பார்கள். இங்கு எல்லாப் பெண்களும் பாதிக்கப்படும் போது, எல்லா ஆண்களையும்தான் பொது வெளியில் கேள்வி கேட்க வேண்டியுள்ளது.

காரணம், பாலியல் சீண்டல்/வல்லுறவு செய்யும் ஆண், ஏதோ ஒரு பெண்ணின் மகனோ சகோதரனோ அல்லது கணவனோதான். அவர்கள் அவர்களைச் சுற்றியுள்ள பெண்களுக்கு நல்லவர்களாக இருப்பார்கள். ஆனால், அனைத்துப் பெண்களுக்கும் அவர்கள் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள் என்பதற்கு, என்ன உத்தரவாதம் உள்ளது? அப்படியே உத்தரவாதம் உண்டு எனச் சொன்னால், இத்தனை வன்புணர்வுகளும் பாலியல் சீண்டல்களும் எப்படி நடக்கின்றன?


**ஒரு பெண் எந்த நிலையில் இருந்தாலும், அவளது அனுமதியின்றி அவளைத் தொடுவதோ, வன்புணர்வதோ தவறு, அது மனிதமற்ற செயல்’ என மட்டும் சொல்ல மாட்டார்கள். இதற்கு நாம் காரணம் கேட்டால், அந்தப் பெண் இப்படி பொதுவெளியில் வாயாடாமல் இருந்திருந்தால், நவநாகரிக உடை உடுத்தாமல் இருந்திருந்தால், அவள் மது அருந்தாமல் இருந்திருந்தால், அவள் அந்த இரவு வெளியில் செல்லாமல் இருந்திருந்தால், என, இப்படிப் பல ‘இருந்திருந்தால்’களை அடுக்கி, அப்பெண் பாலியல் வன்புணர்வு/சீண்டல் செய்யப்பட்டதற்கு காரணம் கற்பித்து, அவளுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதியை நீர்த்துப் போகச் செய்வார்கள். அல்லது அப்பெண்ணுக்கு அப்படி நடந்தது சரிதான் என நியாயம் கற்பிப்பார்கள**

பாலியல் வன்புணர்வு செய்யும் ஆண்களின் மனநிலை என்ன என்பதை அறியும் வகையில் தாரா கௌஷல் (Tara Kaushal) எனும் எழுத்தாளர், பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒன்பது ஆண்களை சந்தித்து, அவர்களிடம் விரிவான விசாரணையை மேற்கொண்டார். அவற்றைத் தொகுத்து, ‘Why Men Rape’ எனும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார். தாரா கௌஷல் அவர்கள் அந்த பாலியல் குற்றவாளிகளிடம் பல கேள்விகளைக் கேட்டார். அக்கேள்விகளுக்கு அந்த குற்றவாளிகள் பதிலளிக்கையில் அவர்களது ஆணுறுப்பு விரைப்படைந்ததையும், தாரா அவர்கள் இருக்கும் போதே அந்த ஆண்கள் அவர்களது ஆணுறுப்பை தொட்டதையும், அவர் பார்த்ததாக பதிவு செய்துள்ளார். அப்படியானால் இடம் பொருள் ஏவல் என்பதோ, யார் தன் எதிரில் இருப்பவர் என்பதோ, ஆண்களின் வன்புணர்வு செயலுக்கு ஒரு பொருட்டல்ல என்பது தெளிவாகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்டப் பெண்களையே குற்றம் சொல்வதும், குற்றவுணர்வுக்கு உள்ளாக்குவதும் எவ்வகையில் நியாயம்?

மேலும் பாலியல் வன்புணர்வு செய்யும் குற்றவாளிகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை மட்டும் சேர்ந்தவர்களாகவோ, அல்லது குறிப்பிட்ட குணாதிசயம் கொண்டவர்களாகவோ மட்டுமில்லை. அனைத்து சமூக நிலைகளிலும் பாலியல் குற்றவாளிகள் இருக்கிறார்கள். இதைத் தான், பெண்ணியவாதியும் தத்துவவியலாளருமான

(7ஆம் பக்கம் பார்க்க...)

# ‘புடின் முழு பைத்தியமாகி விட்டார்’: அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆவேசம்





ரஷ்ய அதிபர் புடின், முற்றிலும் பைத்தியமாகி விட்டார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆவேசம் அடைந்துள்ளார்.

ஐரோப்பிய நாடான உக்ரைன் - -ரஷ்யா இடையே மூன்று ஆண்டுகளை கடந்து போர் நீடிக்கிறது. அமெரிக்க அதிபராக டிரம்ப்பதவியேற்றதும் போரை நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். அவ்வப்போது தற்காலிக போர் நிறுத்தம், பிடிபட்ட கைதிகளை விடுவிப்பது என சமரசம் ஏற்பட்டாலும் நிரந்தர போர் நிறுத்தத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோ உள்ளிட்ட நகரங்கள் மீது, 100க்கும் மேற்பட்ட ட்ரோன்களை உக்ரைன் ஏவியது. இதையடுத்து, உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட நகரங்களில் ட்ரோன்கள், ஏவுகணைகளை ரஷ்யா ஏவியது. இதில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். இதனால், அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார். நேற்று நியூஜெர்ஸியில் பேட்டியளித்த அவர், “நிறைய பேரை புடின் கொல்கிறார். அவருக்கு என்னவாயிற்று என தெரியவில்லை,” என்றார்.

இந்நிலையில், நேற்று தன் சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்ட டிரம்ப், ‘புடினுக்கு முற்றிலுமாக பைத்தியம் பிடித்துவிட்டது’ என ஆவேசமடைந்துள்ளார். அதில், டிரம்ப் கூறியுள்ளதாவது: ரஷ்ய அதிபர் புடினுடன் எனக்கு நல்ல உறவு உண்டு. ஆனால் தேவையில்லாமல் ஏராளமான மக்களை அவர் கொன்று குவிக்கிறார். எந்தவித காரணமும் இன்றி, உக்ரைன் நகரங்களில் ஏவுகணைகளை வீசி தாக்குகிறார்.

அவருக்கு முழு பைத்தியம் பிடித்துவிட்டது. புடின், உக்ரைன் முழுவதையும் கைப்பற்ற நினைத்தால், அதுரஷ்யாவின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். அதே நேரத்தில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, தன் பேச்சு மற்றும் செயல்கள் வாயிலாக, அவரது நாட்டுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. அவர் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் எல்லாமே பிரச்னைகளையே ஏற்படுத்துகிறது. எனக்கு அது பிடிக்கவில்லைஅதை அவர் நிறுத்துவது நல்லது.

மூன்று ஆண்டுகளுக்கு முன் நான் அதிபராக இருந்திருந்தால், இந்த போர் ஏற்பட்டிருக்காது. இது ஜெலன்ஸ்கி, புடின், பைடன் ஆகியோரின் போர் டிரம்பின் போர் கிடையாது. மிக மோசமான தாக்குதல்களை நிறுத்துவதற்கான உதவிகளை மட்டுமே நான்மேற்கொண்டு வருகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, போர் நிறுத்தத்துக்கு புடின் மறுப்பதால், ரஷ்யா மீது, இந்த மாதம் ஏராளமான தடைகளை ஐரோப்பிய யூனியன் நாடுகள் விதித்துள்ளன. ஆனால், ரஷ்யா மீது கூடுதல் வரிகளை விதிக்கப்போவதாக அடிக்கடி கூறும் டிரம்ப், இதுவரை அதுபோன்று எதுவும் செய்யவில்லை. (ஐ)

## லிவர்பூல் வெற்றி அணிவகுப்பில் கார் புகுந்ததில் 50 பேர் காயம்



லிவர்பூல் நகரில் நடந்த வெற்றி அணிவகுப்பின் போது மக்கள் மீது கார் மோதியதில் 50 பேர் காயம் அடைந்தனர். இது தொடர்பாக 53 வயது பிரிட்டிஷ் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் பிரீமியர் லீக் கால்பந்து போட்டி நடந்தது. இதில் லிவர்பூல் அணி வெற்றி பெற்றது. இந்த அணியினர் லிவர்பூல் நகரில் வெற்றி அணிவகுப்பு நடந்தினர். இந்த கூட்டத்திற்குள் ஒரு கார் மோதியதில் 50 பேர் காயம் அடைந்தனர்.

இதில் இரண்டு பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் பயங்கரவாதத்துடன் தொடர்பு இருக்கிறதா என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். இது தொடர்பாக 53 வயது பிரிட்டிஷ் நபர் கைது செய்யப்பட்டனர்.

கார்நின்றதும்ஆத்திரமடைந்த ரசிகர்கள் சூழ்ந்து கொண்டு ஜன்னல்களை உடைத்தனர். கார் டிரைவரை மக்கள் தாக்க முயற்சி செய்த போது பொலிஸார் தடுத்து நிறுத்தனர். இந்த சம்பவம் பயங்கரமானது என பிரிட்டன் பிரதமர் ஸ்டாமர் கண்டனம் தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் ஸ்டாமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: லிவர்பூலில் நடந்த தாக்குதல் மிகவும் கொடூரமானது. காயமடைந்தவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் ஆதரவாக இருப்போம். இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவத்திற்கு விரைவாகவும், தொடர்ந்தும் செயல்பட்ட பொலிஸாரஅவசர சேவைகளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

சம்பவம்தொடர்பாக எடுக்கப்படும்நடவடிக்கைகள் குறித்து எனக்குத் தொடர்ந்து தகவல் கிடைத்து வருகிறது. மேலும் பொலிஸார் விரிவான விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## சொந்த காசில் சூனியம் வைத்த பாகிஸ்தான் புலிகேசி



இந்தியாவை போரில் ஜெயித்து விட்டதாக கூறி, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புக்கு விருந்து வைத்தார்,

ராணுவ தளபதி அசிம் முனீர். அவருக்கு நினைவு பரிசாக மிகப்பெரிய போட்டோவை ஷெபாஸ் ஷெரிப் வழங்கினார். இந்தியாவை நோக்கி சீறி பாய்ந்த நம் ஏவுகணைகள் என்று விளக்கம் சொன்னார்.

வந்திருந்த முப்படை தளபதிகளும், வி.ஐ.பி.,க்களும் பாக்., பிரதமருடன் சேர்ந்து மெய் சிலிர்த்தனர். உற்சாகத்தில் பார்ட்டி களைகட்டியது. நிகழ்ச்சியின் வீடியோ வெளியானதும் சாயம் வெளுத்தது.

அந்த போட்டோ, 2019ல் சீனாவில் நடந்த போர் ஒத்திகையின்போது எடுத்தது என்று அம்பலப்படுத்தினார், ஒரு பாக். பத்திரிகையாளர். உலகமே சிரிப்பதை பார்த்து, மொத்த பாகிஸ்தானும் தலைகுனிந்து நிற்கிறது. (ஐ)

## போர் நிறுத்தம் செய்ய ஹமாஸ் ஒப்புதல் அமெரிக்கா திட்டத்தை ஏற்க சம்மதம்

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு தீர்வு காண, அமெரிக்கா தயார் செய்துள்ள சமரசத் திட்டத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாலஸ்தீனத்தின் காசா திட்டுப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினர், இஸ்ரேலில் புகுந்து நடத்திய தாக்குதல் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான பேர் பிணைக்கதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதையடுத்து காசா மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்த தொடங்கியது. டிரம்ப் எச்சரிக்கையை தொடர்ந்து பிணைக் கைதிகளில் பெரும்பகுதியினரை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். ஆனால் முழுமையாக விடுதலை செய்யவில்லை. சிறிது காலம் போர் நிறுத்தம் செய்து காத்திருந்த இஸ்ரேல், இப்போது மீண்டும் தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளது.

தினமும் ஏராளமான பேர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பிரச்னைக்கு தீர்வு காணும் விதமாக, அமெரிக்க அதிபரின் தூதர் விட்காப் சமரசத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

அவர் தயார் செய்துள்ள திட்டத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்தத் திட்டத்தை இஸ்ரேல் அரசு ஏற்றுக் கொண்டால் போர் நிறுத்தம் அமலுக்கு வரவும், மீதமுள்ள பிணை கைதிகள் விடுதலை செய்யப்படவும் வாய்ப்பு உருவாகும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. (ஐ)



## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2. குச்சவெளிப் பிரதேச சபையில் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

3. மூதூர் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர் .

4. மூதூர் பிரதேச சபையில் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் தவிசாளராகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதிப்படுத்தும் சபை உறுப்பினர் ஒருவர் பிரதித் தவிசாளராகவும் செயற்படுவர்.

நிதி ஒதுக்கம், நிர்வாகம், அதிகாரப் பரவலாக்கம் உள்ளிட்ட மேலும் பல நிபந்தனைகளோடு இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மூதூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 5 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ/க்கு 4 உறுப்பினர்களும் உள்ளனர். இதேபோன்று குச்சவெளிப் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ/க்கு 5 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 4 உறுப்பினர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் கூறுகையில், "இந்தக் காலப் பகுதியில் நாட்டில் 1003 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த வீதி விபத்துக்களினால் சுமார் 7 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர். இதேவேளை, கடந்த 24 மணித்தியாலத்துக்குள் வீதி விபத்துக்களால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்." - என்றார்.

## சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ." - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தோற்றம் பெற்று இதுவரை எந்தவொரு தேர்தலிலும் வெற்றியடையவில்லை. அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேம தாஸ, இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகிக்கத் தகுதி இல்லாத அவர், ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிக்கின்றமை வேடிக் கையானது. தேசிய மக்கள் சக்தி அரசை விமர்சிக் கின்றமைதான் சஜித் பிரேமதாஸவின் நாளாந்த வேலையாக இருக்கின்றது. எமது கட்சியில் குறைகளைக் கண்டு பிடிப்பதே நிறுத்திவிட்டு தமது கட்சி யில் இருக்கும் ஓட்டைகளை அடைப்ப தற்கு அவர் முயற்சிக்க வேண்டும்." - என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கடுமையான எதிர்ப்பை நாடாளுமன்றத்திலும், வெளியிலும் வெளிப்படுத்தியிருந்ததுடன் அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறும் வலியுறுத்தியிருந்தனர்.

இந் நிலையில், வடக்கு மாகாண காணி தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அரசு இன்று மீளப்பெற்றுள்ளது

## வர்த்தமானியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் பிரசுரித்த வர்த்தமானியை மீள்கைவாங்குவதாக செய்தி வெளியாகியுள்ளது. நாம் விதித்த காலக்கெடுவுக்கு முன் இந்தத் தீர்மானம் எடுக்கப்படுள்ளது. இது உடனடியாக இன்றிரவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்." - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமூக ஊடகப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ள அவர் ஜனாதிபதிக்கு இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி எழுதிய கடிதத்தையும் பகிர்ந்துகொண்டுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலான வருமானம் மற்றும் செலவு அறிக்கை சமர்ப்பித்தல் இன்றுடன் நிறைவு!

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் உள்ளிட்ட அனைத்து வேட்பாளர்களும் தமது வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை இன்று (27) நள்ளிரவு 12 மணிக்கு முன்னர், தாங்கள் போட்டியிட்ட மாவட்டத்தில் உள்ள தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான காலம் எவ்வகையிலும் நீடிக்கப்படாது என்றும், சட்டத்தின்படி தேர்தல் முடிந்து 21 நாட்களுக்குள் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் செலவு அறிக்கைகளை நேரில் வந்து சமர்ப்பிக்கலாம் என்றும், இல்லையெனில் தேர்தல் ஆணைக்குழுவின் சிறப்பு இணையதளம் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் செலவு அறிக்கைகளை ஏற்பதற்காக நாடு முழுவதிலும் உள்ள அனைத்து தேர்தல் அலுவலகங்களையும் இன்று நள்ளிரவு 12 மணி வரை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசியல் கட்சியும் தாங்கள் செலவு செய்தவை அல்லது செய்யாதவை தொடர்பான செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், செலவு செய்யவில்லை என்றால் அதுதொடர்பான குறிப்பையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று நள்ளிரவுக்குப் பின்னர் செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்படும் என்றும், எதிர்காலத்தில் தேர்தல் சட்டத்தின்படி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய மக்கள் சக்தியின்

# வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம்




வவுனியா, மே 27

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் ,டம்பெற்றது.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள வன்னிப் பிளாசா விடுதியில் ,ன்று ,ந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வவுனியாவில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டிருந்தனர். இந்த நிகழ்வு கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் முன்னிலையில் ,டம்பெற்றது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள சபைகளில் 26 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாருடைய தவறு?.....

கேட் மன்னே (**Kate Manne**) அவர்கள், "பாலியல் வன்கொடுமை செய்யும் ஆண்களை 'அசுரர்கள்' என்று அழைப்பது தீங்கு விளைவிக்கும். அசுரர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்கள், விசித்திரமானவர்கள், மேலும் அவர்கள் வெளிப்படையாக பயமுறுத்துகிறவர்கள். பாலியல் வன்கொடுமை செய்பவர்களைப் பற்றி பயமுறுத்துவது என்னவென்றால், அவர்கள் ஆண்களாக இருக்க அதிக வாய்ப்புள்ளது என்பதைத் தாண்டி, அவர்களை அடையாளம் காணும் பிரத்யேக குறிப்புகள் மற்றும் தனித்த அம்சங்கள் இல்லாததுதான். பாலியல் வன்கொடுமை செய்யும் அனைவரும் மனிதர்கள். அவர்கள் நம்மிடையே அதிகம்", என்று குறிப்பிடுகிறார்.

பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகும் பெண்கள், குறிப்பிட்ட வயதை உடையவர்களாகவோ, குறிப்பிட்ட ஆடை அணிந்தவர்களாகவோ, குறிப்பிட்ட சமூக நிலையில் உள்ளவர்களாகவோ மட்டுமல்ல் எல்லா சமூக நிலைகளிலும் இருக்கிறார்கள். ஆனால் அத்தனை பாதிக்கப்பட்டப் பெண்களும் தங்களுக்கு நடந்த அநீதியை, பொதுவெளிக்கு கொண்டு வருவதோ, வழக்கு பதிவு செய்வதோ இல்லை. இந்தியாவில் 70 முதல் 80 சதவிகித பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்படுவதில்லை என கணக்கெடுப்பில் தெரியவருகிறது.

ஒரு ஆண் பாலியல் குற்றவாளியாக இருந்தாலும், இந்தச் சமூகத்தில் வாழ எந்த விதமான தடையும் இருப்பதில்லை. அதற்கு முக்கியக் காரணம், அந்த ஆணை யாரும் குற்றவுணர்வுக்குள் தள்ளுவதில்லை. ஆனால், பாதிக்கப்பட்டப் பெண் தனக்கு இப்படியொரு அநீதி நடந்துள்ளது என வெளியில் சொன்னாலே, அவளை வார்த்தைகளால் இச்சமூகம் மீண்டும் மீண்டும் வன்புணர்வு செய்கிறது.

தன்மீது எந்தக் குற்றமும் இல்லாத போதும்கூட, பல பெண்களும் தனக்கு நடந்த அநீதியை, பாலியல் சீண்டலை வெளியே சொல்லத் தயங்குவது, இச்சமூகம் பாதிக்கப்பட்டப் பெண்களின் மீது வெளிப்படுத்தும், அவமானப்படுத்தும் வகையிலான அணுகுமுறையால் (ஏஉைவஅை ளூாயஅைெ) தான்.

ஒரு சமூகமாக குரலற்றவர்களின் குரலாக நிற்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருப்பதும்தான் சரி. அதை விடுத்து பாதிக்கப்பட்டவர்கள் மீதே குற்றம் சொல்வது, பாலியல் வன்புணர்வாளர்களுக்கு நாம் ஒரு சமூகமாக ஆதரவு கொடுப்பதற்கு சமம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நம் சமூகம் இயங்க ஆரம்பிக்கும்போதுதான், தனக்கு நடந்தஃ நடக்கும் அநீதிகளை, வெளியே சொல்லும் தைரியம், பாதிப்படைந்த பெண்களுக்கு ஏற்படும். இதனால் பெரிய அளவிலான மாற்றங்கள் நடக்கவில்லையென்றால் கூட, பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நீதியைப் பெறும் போராட்டத்தில், ஒரு தடங்கலாக இருக்கும் ஏஉைவஅை ளூாயஅைெ எனும் கல்லைக் கொஞ்சம் நகர்த்தி ஓரம் கட்ட முடியும். அதன் விளைவாக அவர்கள் நீதி பெறும் பாதை கொஞ்சம் இலகுவாகும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2025 வெளியிடப்பெற்றது.